# மே - 09 - செவ்வாய்

## புனித பீட்டர் நொலஸ்கோ

**மக்களினங்களின் பெயர்களைப் பதிவு செய்யும்போது, இவர் இங்கேதான் பிறந்தார்' என ஆண்டவர் எழுதுவார். திபா. 87:6**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 11 : 19 – 26

அக்காலத்தில் ஸ்தேவானை முன்னிட்டு உண்டான துன்புறுத்தலால் மக்கள் பெனிசியா, சைப்பிரசு, அந்தியோக்கியா வரை சிதறிப்போயினர். அவர்கள் யூதருக்கு மட்டுமே இறைவார்த்தையை அறிவித்தார்கள் வேறு எவருக்கும் அறிவிக்கவில்லை. அவர்களுள் சைப்பிரசு, சிரேன் ஆகிய இடங்களைச் சேர்ந்த சிலர் இருந்தனர். அவர்கள் அந்தியோக்கியாவுக்கு வந்து அங்குள்ள கிரேக்கரை அணுகி ஆண்டவராகிய இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அறிவித்தார்கள். ஆண்டவரின் கைவன்மையை அவர்கள் பெற்றிருந்தார்கள். பெருந் தொகையான மக்கள் நம்பிக்கை கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர். இந்தச் செய்தி எருசலேம் திருச்சபையினரின் காதில் விழவே அவர்கள் பர்னபாவை அந்தியோக்கியா வரை சென்று வர அனுப்பிவைத்தார்கள். அவர் அங்கு சென்றபோது, கடவுளின் அருள்செயலைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார் மேலும் உறுதியான உள்ளத்தோடு ஆண்டவரைச் சார்ந்திருக்குமாறு அனைவரையும் ஊக்கப்படுத்தினார். அவர் நல்லவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிறைந்தவராய் பெருந்திரளான மக்களை ஆண்டவரிடம் சேர்த்தார். பின்பு சவுலைத் தேடி அவர் தர்சு நகர் சென்றார் அவரைக் கண்டு, அந்தியோக்கியாவுக்கு அழைத்து வந்தார். அவர்கள் ஓராண்டு முழுவதும் அந்தச் சபையாரோடு கூடவே இருந்து பெருந்திரளான மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அந்தியோக்கியாவில்தான் முதல் முறையாகச் சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றார்கள்.

**பதில்பாடல்:** பிற இனத்தாரே நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்

## நற்செய்தி : யோவான் 10 : 22 – 30

அக்காலத்தில் எருசலேமில் கோவில் அர்ப்பண விழா நடந்துகொண்டிருந்தது. அப்போது குளிர்காலம். கோவிலின் சாலமோன் மண்டபத்தில் இயேசு நடந்து கொண்டிருந்தார். யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "இன்னும் எவ்வளவு காலம் நாங்கள் காத்திருக்க வேண்டும்? நீர் மெசியாவானால் அதை எங்களிடம் வெளிப்படையாகச் சொல்லிவிடும்" என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக, "நான் உங்களிடம் சொன்னேன் நீங்கள் தான் நம்பவில்லை. என் தந்தையின் பெயரால் நான் செய்யும் செயல்களே எனக்குச் சான்றாக அமைகின்றன. ஆனால் நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் என் மந்தையை சேர்ந்தவர்கள் அல்ல. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப்பின் தொடர்கின்றன. நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ளமாட்டார். அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும்விடப் பெரியவர். அவற்றை என் தந்தையின் கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ள இயலாது. நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்" என்றார்.

**தியானம்:** நம்பிக்கையை வாழ்வாக்குவதே கிறிஸ்தவ அடையாளம் கிறிஸ்தவத்தின் அடையாளம் என்ன? என்னும் கேள்வி என்றுமே நமக்கு பொருளுள்ளது. கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருப்பது ஒன்றே நமக்கு அடையாளமாகிவிடுமா? அல்லது அந்த நம்பிக்கையை வாழ்வாக்கும் செயல்பாடுகளும் அடையாளமாகுமா? திருத்தூதர்களும், தொடக்ககாலத் திருச்சபையினரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டு அவரைப் பிறருக்கு அறிவிப்பதோடு நின்று விடவில்லை. தங்கள் நம்பிக்கையை உறவோடு வாழ்வதிலும், பிறர் அன்புப் பணிகளிலும், நற்செய்தி அறிவிப்பதிலும் வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் வாழ்ந்தும் காட்டினர். "சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது. என்பது அவர்களில் நிறைவேறியது. நம்காலத்தில் மலிந்து கிடக்கும் மட்டற்ற பொருளாசை, சாதி உணர்வு, தன்னலத் தலைதூக்கல், சமய வெறுப்பு போன்றவை நாம் கிறிஸ்தவர்கள் என்பதன் அடையாளமா? இதை உணர்ந்து நம்பிக்கையை வாழ்ந்து காட்ட இறைமகன் இயேசு நற்செய்தியின் வழியாக இன்று எம்ஒவ்வொருவரையும் அன்புடன் அழைக்கிறார்.